
# எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் 50

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம், இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**




# ஜாதிவாரிக் கணக்கெடுப்பு – உண்மையின் உரைகல்!

ஜாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பிற்கு எதிரான கருத்துடைய பழமைவாதிகள் காலந்தோறும் இருந்து வருகிறார்கள். ஆங்கிலேய அரசு, 1871-ஆம் ஆண்டு முதல், எதிர்க்கேள்விகளை எதிர்கொண்டு வந்தது. மக்கள்தொகை அறிக்கையில், ஜாதி தொடர்பான கேள்விகள், ஜாதிகளின் அடிப்படையில் மக்களை வகைப்படுத்துவது, முதலியவற்றைத் தவிர்க்க வேண்டும் என்றும், மக்கள்தொகை அறிக்கையில், ஜாதி குறித்த விவாதங்களைத் தவிர்க்க வேண்டும் என்றும், ஜாதிய ஆதரவாளர்கள் கூறி வந்தனர்.

'கிறிஸ்தவ அரசு மறைமுகமாக சாதி அமைப்பை நீட்டிக்க உதவுகிறது, அறிக்கையில் வெளிவந்த புள்ளிவிவரங்கள் துல்லியமாக இல்லாததால் அவை எதற்கும் உதவாது, மக்கள்தொகை அறிக்கை, சாதிய வேறுபாடுகளை நிலைநிறுத்தி, சாதிக் குழுக்களிடையே பகைமையை ஊக்குவிக்கிறது' உள்ளிட்ட வாதங்களை சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பை எதிர்ப்பவர்கள் முன்வைத்தனர். ஆனால், இவற்றையெல்லாம் புறந்தள்ளிய ஆங்கிலேய அரசு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு அறிக்கைகளில், சாதிய அமைப்பின் தோற்றத்தையும், அதன் தற்போதைய நிலையையும் அறிவியல், இனவியல், சமூகவியல் அடிப்படைகளில் ஆராய்ந்தது.

## சமூக அடுக்குகள்

சாதியே இந்தியச் சமூகக் கட்டமைப்பின் அடிப்படையாக உள்ளது என்பதும், இந்துச் சமூகத்தின் பல்வேறு சமூக அடுக்குகளில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டறிய, சாதி அடிப்படையிலான புள்ளிவிவரங்கள் மிகச் சிறந்த வழிகாட்டியாக இருக்கின்றன என்பதும் சந்தேகத்திற்கு இடமில்லாத உண்மைகள் என்பதாலும், திருமணம், பழக்கவழக்கங்கள், கல்வி, தொழில் உள்ளிட்டவை சாதியுடன் பிரிக்கமுடியாத வகையில் இணைக்கப்பட்டுள்ளன என்பதாலும், சாதியை உள்ளடக்காத மக்கள்தொகைக் கணக்கெடுப்பு முழுமையற்றதாக இருக்கும் என்று ஆங்கிலேய அரசு கருதியது.

மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்போது, கண்டறியப்பட்ட சாதி குறித்த, புள்ளி விவரங்களின் இருப்பு மட்டுமே சாதி அமைப்பை நிலைநிறுத்த உதவாது. மாறாக அப்புள்ளிவிவரங்கள் அந்த நேரத்தில் இருந்த மக்களின் சமூக நிலைமைகள் குறித்த அறிக்கையாகும். மேலும் ஒவ்வொரு அறிக்கையையும் அதற்கு முந்தைய அறிக்கைகளுடன் ஒப்பிட்டு, அச்சமூக நிலைமைகள் எவ்வாறு மாறி வருகின்றன, என்பதைக் கண்டறிய உதவின.

சில பழமைவாதிகள், சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்கு எதிராக இருந்தாலும், உண்மையில் மக்களிடம் மிகப்பெரும் ஆர்வமும் ஆதரவும் இருந்தன. தமது வயது அல்லது தொழில் உள்ளிட்ட தகவல்களைப் பதிவு செய்வது பற்றி சிறிதும் கவலைப்படாத இந்துக்கள், தங்கள் சாதியைச் சரியாகப் பதிவு செய்வதில் மிகுந்த கவனம் செலுத்தினர். மக்கள்தொகைக் கணக்கெடுப்பாளர்கள் சாதியைச் சரியாகப் பதிவு செய்யவில்லை என்று மக்கள்தொகைக் கண்காணிப்பாளரிடம் பலர் புகார் அளித்தனர், பல்வேறு தரப்பில் இருந்து தந்திகள் அனுப்பினர் என்பதின் மூலம் மக்கள் காட்டிய ஆர்வத்தைப் புரிந்து கொள்ளலாம்.

சாதி, இந்திய சமூகத்தில் உயிருள்ள சக்தியாக உள்ளது, என்பதை பல சாதிகளைச் சேர்ந்தவர்கள் காட்டிய ஆர்வம் நிரூபித்தது.

## பிராமணர் எண்ணிக்கை

சாதி குறித்த சில புள்ளிவிவரங்கள் தவறாக இருந்தன என்பது உண்மை. இருப்பினும், அதற்கு அரசோ அல்லது மக்கள்தொகைக் கணக்கெடுப்பு அலுவலர்களோ காரணமில்லை. மக்கள் தத்தம் சாதி நிலைமையை உயர்த்திக்காட்ட விரும்பினர் என்பதே இதற்குக் காரணம். எடுத்துக்காட்டாக, 1911-ஆம் ஆண்டிற்கும் 1921-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் பிராமணர்களில் கல்வியறிவு சற்றுக் குறைந்திருந்தது. பிராமணர்களின் கல்வியறிவு விகிதத்தில் ஏற்பட்ட சரிவுக்கான ஒரே காரணம் என்னவெனில், கல்வியறிவு குறைவாக உள்ள பிற சாதிகளைச் சேர்ந்த பலர் தங்களைப் 'பிராமணர்கள்' என்று பதிவு செய்ததே ஆகும், அதனால், பிராமணர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து, கல்வியறிவற்றவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்தது.

ஒவ்வொரு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் போதும் பல்வேறு சாதியினர் தத்தம் சாதியினரைக் குறிப்பிட்ட பெயர்களில் பதிவு செய்யவேண்டும் என்று விரும்பியதால், புள்ளிவிவரங்களில் ஏற்ற இறக்கம் இருந்தன. எடுத்துக்காட்டாக சௌராஷ்டிரர்கள் பிராமணர்களாகவும், நாடார்கள், வன்னியர்கள், க்ஷத்திரியர்களாகவும், கோமட்டிகள் வைசியர்களாகவும், கம்மாளர்கள் விஸ்வப் பிராமணர்களாகவும், இடிகாக்கள், ஆர்ய செட்டிகள் பலிஜாக்களாகவும், லிங்காயத்துகள், வீர சைவர்களாகவும், படுகர்கள் லிங்காயத்துகளாகவும் தங்களைப் பதிவு செய்துகொள்ள விரும்பினர்.

இன்னும் சில சாதியினர் தங்கள் தொழில்களைப் பதிவு செய்வதிலும் மாறுபட்ட

**1920-களில் நீதிக்கட்சியினர் வெற்றி பெற்று சட்டமன்றத்திலும் நிர்வாகத்திலும் நுழைந்து, வகுப்புவாரி உரிமையை நிலைநாட்டிய பின்னரே ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதியினரின் நிலை மாறத் தொடங்கியது.**

கருத்துக் கொண்டிருந்தனர். எடுத்துக்காட்டாக, நாடார் சமூகத்தினர் 1921-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் பாரம்பரியத் தொழில்களைக் காட்ட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டனர். அதை மெட்ராஸ் மாகாண அரசு ஏற்றுக்கொண்டது. இதுவரையிலான மக்கள்தொகை அறிக்கைகளில், நாடார்களின் பாரம்பரியத் தொழிலாக, 'கள் இறக்குதல்' இருந்தது என்று பதிவு செய்யப்பட்டது. ஆனால், நாடார்கள் தாங்கள் பாரம்பரியமாக நிலப்பிரபுக்கள் என்றும், தங்கள் சாதியைச் சார்ந்த சிலர் மட்டுமே கள் இறக்கும் தொழில் செய்கின்றனர் என்றும் கூறினர்.

## சாதிச் சங்கங்கள்!

மக்கள்தொகை அறிக்கைகளில், கிடைத்த புள்ளிவிவரங்களால் புதுப்புதுச் சாதிச் சங்கங்கள் தோன்றின. அவர்கள் தத்தம் சாதிப்பெயரை, எவ்வாறு பதிவு செய்யவேண்டும் என்று முடிவெடுத்தனர். 1920-களில் தோன்றிய 'முத்துராஜா சங்கம்' தங்கள் சாதியினரை 'முத்துராஜா' என்று பதிவுசெய்யுமாறு கோரியது. அதன் விளைவாக, 1911-இல் ஒரு லட்சத்து 53 ஆயிரத்து 422 என்ற அளவில் இருந்த முத்துராஜா சாதியின் மக்கள்தொகை 1921-இல் 2 லட்சத்து 27 ஆயிரத்து 536 என்ற அளவிற்கு உயர்ந்தது. 'முத்துராஜா சாதி சங்கம்' செய்த பிரச்சாரத்தால் 48% உயர்வு சாத்தியமாயிற்று. இதே காலகட்டத்தில் ஒடுக்கப்பட்ட சாதியினரில் ஒரு பகுதியினர் 'ஆதிதிராவிடர்' என்று பதிவு செய்ய ஆரம்பித்தனர்.

1871-இல் அனைத்து ஒடுக்கப்பட்ட சாதியினரையும் 'பறையர்' என்று பதிவு செய்த ஆங்கில அரசு பிற்கால மக்கள்தொகை அறிக்கைகளில், தனித்தனி சாதியின் கீழ் பதிவு செய்யத் தொடங்கினர். 1921-இல் 50,015 பேர் தம்மை ஆதிதிராவிடர் என்று பதிவு செய்திருந்தனர். இவர்களில் பெரும்பகுதியினர், கிட்டத்தட்ட 50,000 பேர், சென்னை, செங்கல்பட்டு ஆகிய இரு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

இத்தனை முயற்சிக்குப் பின்னரும் கீழ்நிலையில் இருந்த சாதியினரின் சமூகப் பொருளாதார நிலை அப்படியே தொடர்ந்தது. 1921-ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் படி 1000-க்கு 64 பிராமணர்கள் மதம் சார்ந்த தொழில்களில் இருந்தனர். 246 பேர் விவசாயம் செய்யாத நிலவுடைமையாளர்களாகவும், 424 பேர் விவசாயம் செய்பவர்களாகவும் தங்கள் தொழில்களைப் பதிவு செய்திருந்தனர். அதற்கு எதிர்மாறாக 1000-க்கு 408 அருந்ததியர்கள் விவசாயக் கூலிகளாகவும், 152 பேர் கூலிகளாகவும் இருந்தனர்.

விவசாயக் கூலிகள் 3 அணா முதல் 8 அணா வரை கூலி பெற்றனர். பல இடங்களில் சம்பளமாக விவசாய விளை பொருட்கள் தரப்பட்டன. பெரும்பான்மையாக அவர்களுக்குத் தரப்பட்ட சம்பளம் மிகக் குறைவாகவே இருந்தது. குறைந்த சம்பளம் கிடைக்கும் தொழில்களில் இருந்து தப்பிக்க பர்மா, இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்குக் கூலிகளாகச் சென்றனர். சில சமயம் அதைக் காரணம் காட்டி, தங்கள் சம்பளத்தை உயர்த்திக் கொண்டனர். கீழ்நிலை சாதியினர் செய்த மேற்கண்ட பல்வேறு முயற்சிகளால் சிற்சில வெற்றிகள் கிட்டினாலும், பெரிய மாற்றங்கள் ஏதுமில்லை.

1920-களில் நீதிக்கட்சியினர் வெற்றி பெற்று சட்டமன்றத்திலும் நிர்வாகத்திலும் நுழைந்து, வகுப்புவாரி உரிமையை நிலைநாட்டிய பின்னரே ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதியினரின் நிலை மாறத் தொடங்கியது.

...குரல் ஒலிக்கும்

## ஒன்றிய அரசைப் பாதுகாக்க, போலி விமர்சனம்!

'பீகாரில் மாநில அரசே சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தியபோது, தமிழ்நாட்டில் ஏன் நடத்த முடியவில்லை?' என்று சிலர் கேட்கின்றனர். அது அறியாமையில் கேட்பது அல்ல, அதைச் செய்யக்கூடிய இடத்தில் இருப்பவர்களை நோக்கி, கேள்வி எழுப்ப முடியாதவர்கள் என்பதால், மாநில அரசை நோக்கி கேட்கிறார்கள். இதுகுறித்து, விக்னேஷ் ஆனந்த் என்பவர், சமூக வலைத்தளப் பக்கத்தில் இட்ட பதிவில் இருந்து:

"பீகாரில் நடத்தப்பட்ட சாதிவாரிக் கணக்கெடுப்பு, பஞ்சாயத்து வாரியாக நடத்தப்படவில்லை என்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் வெளிப்பட்டுள்ளது. 'டெலிகிராஃப்' ஊடகத்தில் செய்தி வெளியாகியிருக்கிறது.

அரைகுறையாக நடத்தப்பட்ட ஆய்வு என்பதால்தான், அதன் அடிப்படையில் இடஒதுக்கீட்டை 50%-இல் இருந்து 65%-ஆக உயர்த்தியது செல்லாது என பாட்னா உயர்நீதிமன்றம் ரத்து செய்துவிட்டது. 2001 சாதிவாரிக் கணக்கெடுப்பு அடிப்படையில், அருந்ததியர் உள் இடஒதுக்கீட்டை தி.மு.க. அரசு கொண்டு வந்தது. உச்ச நீதிமன்றத்தில் பலமுறை, இதற்கு எதிராக வழக்கு தொடுத்தும், 3% உள் ஒதுக்கீட்டை முறியடிக்க முடியவில்லை. 2021 தேர்தலுக்காக அ.தி.மு.க. வன்னியர்களுக்கு 10.5% உள் ஒதுக்கீடு அரசாணை வெளியிட்டது. ஆர்.பி.உதயகுமார் இந்த ஒதுக்கீடு தற்காலிகமானது என சொன்னார். ராமதாஸ் இந்த ஒதுக்கீடு நிரந்தரமானது என்றார். நீதிமன்றம் இந்த ஒதுக்கீட்டை ரத்து செய்துவிட்டது.

சாதிவாரிக் கணக்கெடுப்பு மாநில அரசு எடுக்க முடியும் என்பது சாத்தியமாக இருந்தால், 2019-இல் அ.தி.மு.க. அரசை சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தச்சொல்லி, தி.மு.க. போராடியிருக்கும். அது சாத்தியமில்லை என்பதால்தான், 2019 –தேர்தல் அறிக்கையில் ஒன்றிய அரசு சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என வற்புறுத்தியது. நீங்கள் உண்மையான இந்துவாக இருந்தால் சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த வேண்டும், என தி.மு.க. துணைப்பொதுச்செயலாளர் ஆ.ராசா அவர்கள் நாடாளுமன்றத்தில் கேட்டார். 2011 சாதிவாரிக் கணக்கெடுப்பு முடிவுகளை வெளியிட வேண்டும் என எம்.பி. வில்சன் அவர்கள் கோரிக்கை வைத்தார். ஆனால், பா.ஜ.க.வைப் பாதுகாக்க, சிலர் தி.மு.க.வைக் கேட்கிறார்கள்" எனப் பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### கல்லூரிகளில் கழகக் கூட்டங்கள்!



மரு.ஆ.மாரிமுத்து

1980-ஆம் ஆண்டு, நான் சென்னை வேப்பேரி கால்நடை மருத்துவக் கல்லூரி தி.மு.க. மாணவர் அணிச் செயலாளராக இருந்த காலம். 85 சதவிகித மாணவர்கள், தி.மு.க.வில் மாணவர் அணி உறுப்பினர்களாக இருந்தனர். மிசா.கணேசன், ரகுமான்கான், க.சுப்பு போன்றோர் கழக முன்னணியினர் கல்லூரிகளுக்குச் சென்று, கழகத்தை வளர்த்த காலம் அது, அப்போது இன்றைய கழகத் தலைவர் அவர்களை அழைத்துக் கூட்டம் போட்டோம், அவரை வரவேற்று, சிறப்புச் செய்த போது எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. மறக்க முடியாத நினைவுகள்.

**– மரு.ஆ.மாரிமுத்து, தலைவர், மாவட்டக் கழக மருத்துவ அணி, தென்காசி தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### வட மாநிலங்களில் பெரியார்!

1941-ஆம் ஆண்டு இறுதியில், வட மாநிலச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார் தந்தை பெரியார். சிறிதும் பெரிதுமாக பல கூட்டங்களில் பேசினார். எல்லாக் கூட்டங்களிலும் திராவிட இயக்கக் கருத்துகளை வலியுறுத்தினார். அந்தக் கூட்டங்களில் எல்லாம் பார்ப்பனர் மற்றும் பார்ப்பனியத்தின் கொடுமைகளையும் எடுத்துக்கூற தவறவில்லை. 1940-ஆம் ஆண்டு வடமாநிலங்களுக்குச் சென்றபோது பெரியாருக்குக் கிடைத்த வரவேற்பு போல, அந்த முறையும் மிகப்பெரிய வரவேற்பு கிடைத்தது.

# திராவிடத்தால் வாழ்கிறோம்

754

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131